# ஆண்டு அறிக்கை

# 2010

# இலங்கை போக்குவரத்துச் சபை

# உள்ளடக்கம்

01 தொலை நோக்கு, குறிக்கோள், நோக்கங்கள்

02 அறிமுகம்

03 தலைவரின் செய்தி

04 செயற்திறன்

05 இறுதி கணக்குகள்

06 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## தொலை நோக்கு

பிராந்தியத்தின் அதி சிறந்த பயணிப் போக்குவரத்தாளர்.

## குறிக்கோள்

பொதுமக்களுக்கு பாதுகாப்பான, நம்பத்தகுந்த, வசதிகளுள்ள வீதிப்பயணிப் போக்குவரத்துச் சேவையை நியாயமான கட்டண முறையின் கீழ் சேவை அர்ப்பணிப்புடன் செயலாற்றும் உற்பத்திவளமிக்க பணியாளரின் மூலம், சகல வளங்களையும் உச்சநிலையில் பயன்படுத்தி பெற்றுக்கொடுத்து பொருளாதார ரீதியில் சமநிலையைப் பேணும் நிறுவகமாக இயங்கல்.

## நோக்கங்கள்

01. 12 பிராந்திய காரியாலயங்கள் மூலம் சிறந்த தரமுடைய பயனுடைய பஸ் சேவைகளை ஊக்குவித்து அவற்றை கண்காணித்து இணைத்து ஆலோசனை வழங்குதல்.

02. பாடசாலை செல்லும் சிறார்களுக்கு திருப்திகரமான பஸ் சேவைகளை அளித்தல்.

03. பண நோக்கங்களுக்காக தனியார் துறையினரால் செயலாற்றப்படாமல் அசட்டை செய்யப்பட்டுள்ள வருவாயற்ற பாதைகளில் பஸ் சேவைகளை அளித்தல்.

04. புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்திலிருந்து தூர இடங்களுக்கு பஸ் சேவைகளை அளித்தல்.

05. பொது, தனியார் துறை போக்குவரத்து முகவர் நிலையங்களை இணைத்தல்.

06. விழாக்கள், விசேட வைபவங்கள், பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்கள் முதலிய தேவைகளுக்கு பஸ் சேவைகளை இணைத்தல்.

07. தபால்களையும், பத்திரிகைகளையும் பஸ்களில் ஏற்றிச் செல்லல்.

08. பஸ் செயலாற்றத்திற்காக பொது திறைசேரி, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாகாணசபைகள், உரிய அமைச்சுகள் அத்துடன் இதர தொடர்புடைய முகவர் நிலையங்கள் ஆகியவற்றுக்கும் பிராந்திய காரியாலயங்களுக்குமிடையே இணைப்பை ஏற்படுத்துதல்.

09. இ.போ.சபை சாரதிப்பயிற்சி சாலைகளிலிருந்து நன்கு பயிற்றப்பட்ட ஒழுக்காற்றுடைய சாரதிகளை அளித்தல்.

10. சாரதிகளுக்கும், நடத்துனர்களுக்கும், பொறிவலர்களுக்கும், மேற்பார்வை பணியாளர்களுக்கும் கருத்தரங்குகள், தொழில் பாசறைகள் ஆகியவற்றை நடாத்துதல்.

11. பிராந்திய வேலைக்களங்களால் உற்பத்தி செய்யப்படும் அலகுகள், துணை அலகுகள் ஆகியவற்றை சாலைகளுக்கு அளித்தல்.

12. வயது வந்தோர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் கவர்ச்சிகரமான கழிவு வீதங்களில் பருவகால சீட்டுகளை அளித்தல்.

13. முக்கியமான மாற்று உறுப்புகளை மாகாண வேலைக்களங்களுக்கு விநியோகிப்பதற்காக நாரஹேன்பிட்டியிலுள்ள இ.போ.சபை தலைமை அலுவலகத்தில் இடைப்பெயற்சி களஞ்சியமொன்றை பேணல்.

14. சாலைகளில் பாதுகாப்பு புலனாய்வுகளையும், திடீர் பரிசோதனைக்குழு செவ்வை பார்த்தல் முதலியவற்றையும் நடாத்துதல்.

**அறிமுகம்**

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு போக்குவரத்தின் எல்லா அம்சங்களும் அவசியமானது என்பதில் ஐயத்திற்கிடமில்லை. இக்கூற்றுக்கு வீதிப் பயணப் போக்குவரத்து விதிவிலக்கல்ல. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாட்டில் கிராமங்களையும், நகரங்களையும் அதன் மூலம் முழு நாட்டையுமே இணைக்கும் முக்கிய பாத்திரத்தை பஸ் வண்டி வகிக்கின்றது.

1957.10.31 ஆம் திகதி 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகார சட்டத்தின் பிரகாரம் நாடு முழுவதும் 80 பஸ் செயலாற்றுனநர்களால் மொத்தமாக 1200 பாதைகளில் செயலாற்றப்படட 3532 பதிவு செய்த பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டன. இதன் விளைவாக 1958.01.01 முதல் இலங்கை போக்குவரத்து சபை உருவாகியது.

அன்று முதல் 1977 ஆம் ஆண்டு வரை இ.போ.சபை வீதிப் பயணப் போக்குவரத்தில் ஏகபோக உரிமையைக் கொண்டிருந்தது. 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க போக்குவரத்துச் சபை சட்டத்தின் மூலம் இ.போ.சபையினால் இணைக்கப்பட்ட 10 பிராந்திய போக்குவரத்து சபைகள் 1978 ஆம் ஆண்டு இ.போ.சபையை பன்முகப்படுத்தியதன் மூலம் உருவானது. சிறியளவிலான அலகுகள் உள்ளூர் பிராந்திய தேவைகளுக்கும், உள்ளூர் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவான தீர்வு கண்டு பயணம் செய்யும் பொதுமக்களுக்கு வினைத்திறனுடைய பயனுள்ள விளைவுகளை இ.போ.ச பன்முகப்படுத்தவதன் மூலம் அடையலாம் என அரசு கருதியது.

ஆயினும் இ.போ.ச. தொடர்ந்து பெருவாரியான நட்டத்தில் இயங்கியமையினாலும், பொருளாதாரம் சுதந்திர மயமாக்கப்படல் வேண்டுமென்ற நவீன எண்ணக்கருவினால் உருவாகிய பயணத் தேவையை பூர்த்தி செய்ய முடியாமையினாலும் வீதிப் பயணிப் போக்குவரத்துக்கு தனியார் துறையை அனுமதிப்பது என முடிவு செய்யப்பட்டது.

பொதுத் துறையை மீள அமைக்கும் பணியில் ஒரு பகுதியாக இ.போ.ச. மக்கள் மயமாக்கப்படுவதற்கென அடையாளம் காணப்பட்டது. அரசு தனியார் மயப்படுத்தலில் உறுதியான நம்பிக்கையை வைத்திருந்தமையால் இம் மாற்றம் அரச கூட்டுத்தாபனங்களை அதாவது அரச உடைமையாக்கப்பட்ட வியாபார முயற்சிகளை பொது கம்பனிகளாக மாற்றும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அதிகார சட்டத்தின் கீழ் இடம்பெற்றது.

மக்கள் மயமாக்கப்படுத்தலின்போது இயங்கிய 93 போக்குவரத்து சபை சாலைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறான வரையறுக்கப்பட்ட கம்பனிகளாகின. ஊழியர்களின் மத்தியில் கம்பனியின் மொத்தப் பங்குத் தொகையின் அரைவாசி விநியோகிக்கப்பட்டு மீதிப் பகுதியை பொதுத் திறைசேரி வைத்திருந்தது. பெரும்பாலும் ஊழியர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை இக் கம்பனிகளின் நிர்வாகத்தை நடத்தியது. மக்கள்மயமாக்கள் ஏனோ தானோ என்ற முறையில் செயற்படுத்தப்பட்டமையால் விரும்பிய விளைவுகளை எட்ட முடியவில்லை.

எனவே 1997 ஆம் ஆண்டு 1991 ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் திருத்த மூலம் பஸ் கம்பனிகள் 11 கொத்தணி பஸ் கம்பனிகளாக மாற்றப்பட்டன. கொத்தணி பஸ் கம்பனிகளாலும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. அதிக பணியாளர், ஒழுக்காற்றில் பெருவீழ்ச்சி, நியாயமற்ற போட்டி, சமூகக்கடப்பாடுகள், தொழில் முறைமையின்மை, வினைத்திறன்மையின்மை, செயலாற்று செலவுகளில் உயர்ச்சி, அரசியல், தொழிற்சங்க முறையற்ற தலையீடு, கட்டுமீறிய ஊழல் ஆகியன கொத்தணி பஸ் கம்பனிகளில் நிலவிய சில பிரச்சனைகளாகும்.

மேற்குறித்த பிரச்சனைகளுக்கு தீர்வினைக் காணும் பொருட்டு 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் 2005.10.19 ஆம் திகதி முதல் இலங்கை போக்குவரத்துச் சபை தாபிக்கப்பட்டது.

**தலைவரின் செய்தி**

இ.போ.சபையின் 2010 ஆம் ஆண்டின் செயலாற்றுகை மட்டம் திருப்திகரமான முறையில் மேற் கொள்ளப்பட்டுள்ளமை பற்றி குறிப்பிடுவது பெருமிதமாக உள்ளது. அதனையிட்டு நாம் அனைவரும் பெருமையடைய முடியும். இது உண்மையில் இ.போ.சபையானது மேன்மேலும் முன்னோக்கி செல்வதற்கான ஒரு ஊக்குவிப்பும், தூண்டுதலும் ஆகும். அத்துடன் பயணிகளுக்கு நம்பிக்கையானதும், பாதுகாப்பானதுமான பயணிகள் போக்குவரத்து சேவை வழங்குதல் மற்றும் பாடசாலை சேவை, கிராமப்புற சேவை, ஏனைய பொருத்தமான சேவைகள் போன்ற விசேட செயற்றிட்டங்கள் ஆகியனவும் முழு சமூகத்தினராலும் பாராட்டப்படக்கூடியதாக மெச்சத்தக்க வகையில் செயற்படுத்தப்பட்டது.

கடந்த நான்கு வருடங்களுடன் ஒப்பிடுகையில், 2010 ஆம் ஆண்டில் நாளாந்தம் செயற்படுத்தப்படும் கி.மீற்றறின் அளவானது ஏறக்குறைய 100,000 கி.மீற்றறினால் மிகையான ஒரு அதிகரிப்பைக் காட்டியுள்ளது. 2007 இல் நாள் ஒன்றுக்கு செயலாற்றப்பட்ட 833,313 கி.மீற்றர் 2010 இல் 935,940 கி.மீற்றர் ஆக உயர்வடைந்துள்ளது. இவ் அதிகரிப்பானது இ.போ.சபை, பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்குகிறது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

வழிப்பட்டியல் வருமானம் செயலாற்றப்பட்ட கி.மீற்றறின் அதிகரிப்புக்கு சமாந்தரமாக அதிகரித்தமை நிறுவனத்தின் பலம் மற்றும் ஸ்திரத்தன்மைக்கு ஓர் சான்றாகும். 2007 இல் நாளாந்த சராசரி வருமானம் 29.3 மில்லியன் ஆகும். ஆனால் 2010 இல் இவ்வருமானம் 40.2 மில்லியன் ஆக அதிகரித்துள்ளது. மீளாய்வுக்குரிய ஆண்டில் நிதிக் கட்டுப்பாடுகளுக்கு ஆளாகிய போதிலும், விஷேடமாக திறைசேரியிலிருந்து பெறப்படும் உதவுதொகைகள் பெருமளவுக்கு குறைக்கப்பட்டபோதும் இ.போ.சபையின் செயற்பாடுகள் திருப்திகரமான முறையில் மேற்கொள்ள முடிந்துள்ளமையானது எம்மைப் பொறுத்த வரையில் அதிஷ்டவசமானதொரு நிகழ்வாகவே குறிப்பிட முடியும்.

நாளாந்த பஸ் செயலாற்றுகை விபரங்களை இணையத்தில் உடனுக்குடன் பெறக்கூடிய வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை, பயணிகளின் முறைப்பாடுகளை உடனுக்குடன் தீர்த்து வைக்கும் முகமாக செயற்பாட்டு அறை உருவாக்கம் மற்றும் பஸ் வண்டி பயணம் மேற்கொள்ளும் இடம், திரட்டப்படும் வருமானம், செயற்படுத்தப்படும் கி.மீற்றர் ஆகிய விபரங்களை அறியக்கூடிய வகையில் GPRS தொழில்நுட்பத்துடனான இலத்திரனியல் பஸ் பயணச் சீட்டு வழங்கும் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டமை, சபையின் பணிப்பாளர் ஒருவரின் கீழ் திடீர் பரிசோதனைப் பிரிவு மற்றும் விஷேட புலனாய்வுப் பிரிவு மீளமைக்கப்பட்டமை, இலகு கடன் கொடுப்பனவு அடிப்படையில் 100 பயணிகள் போக்குவரத்து பஸ் வண்டிகள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை ஆகிய செயற்பாடுகள் இ.போ.சபையினை மீளவும் சக்திவாய்ந்த ஒரு நிறுவனமாக நிலைநிறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட விஷேட வேலைத்திட்டங்களில் சிலவாகும்.

நிதிக்கட்டுப்பாடுகள் காரணமாக நீண்டகாலமாக தாமதப்படுத்தப்பட்ட ஊழியர்களின் பணிக்கொடைக் கொடுப்பனவு ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு அக்கொடுப்பனவு தொடர்பான குறைபாடுகள் சீராக்கப்பட்டு 2008.12.31 வரையிலான கொடுப்பனவு முழுமையாகக் கொடுத்து தீர்க்கப்பட்டுள்ளது.

உண்மையில் மேற்கூறப்பட்ட பணிகளை திருப்தியளிக்கக்கூடிய வகையில் பூர்த்தி செய்வதற்கும், இ.போ.சபையில் சிறந்ததொரு சூழ்நிலையை உருவாக்குவதற்கும் முடிந்ததையிட்டு குறிப்பிடுவதில் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. அதற்காக உச்சமட்ட ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்கிய சகல தரப்பு ஊழியர்களும் மிகவும் பாராட்டுதலுக்குரியவர்கள் ஆவர்.

சசி வெல்கம

தலைவர்

இலங்கை போக்குவரத்துச் சபை.

**திட்டமிடல், அபிவிருத்தி பகுதி**

2010 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டம், செயற்றிட்டம் என்பவற்றை தயாரித்தல், காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்தல், சாலைகள், பிராந்திய அலுவலகங்கள், சகல பிராந்திய வேலைக்களங்கள், சாரதி பயிற்சி பாடசாலைகள், சுற்றுலா வங்களாக்களினதும், இ.போ.ச. தலைமைக் காரியாலயம், ஒருகொடவத்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தினதும் இலாப நட்ட அறிக்கைகள் தலைமை அலுவலகத்திற்கு கொண்டுவரப்பட்டு கணனிமயப்படுத்தப்படுதல், இணையத்தினூடாக தலைமையலுவலகத்திற்கு பெறப்படும் சாலைகள் மற்றும் பிரதேச அலுவலகங்களின் இலாப நட்ட அறிக்கைகளை தொகுத்து இலாப நட்ட அறிக்கை ஒன்றினை தயாரித்தல் , அது தொடர்பான பகுப்பாய்வு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு சிரேஷ்ட முகாமைத் துவத்திற்கு சமர்ப்பித்தல்> போக்குவரத்து அமைச்சு , இலங்கை மத்திய வங்கி மற்றும் வரவு செலவுத் திட்டக் குழுவினால் வேண்டப்படும் அறிக்கைகளும் இப்பிரிவினால் தயாரித்து வழங்கப்படுகிறது.

**உள்ளகக் கணக்காய்வு பகுதி**

2010 ஆம் ஆண்டில் 1532 கணக்காய்வு விசாரணை அறிக்கைகள் வெளியிடப்பட்டது. இந்த கணக்காய்வு விசாரணை அறிக்கைகளின்படி ரூபா.16,385,385.70 அறவிடப்படவேண்டியிருந்தது.

**செயலகப் பகுதி**

2010 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயரும், பதவியும் பின்வருமாறு.

| **பெயர்** | **பதவி** |
|---|---|
| திரு. தம்மிக்க ஹேவாபத்திரண | தலைவர் - இ.போ.ச. |
| திரு. டீ.விதானகமாச்சி | திறைசரி - பிரதிநிதி |
| திரு. எஸ்.பி.சி.ஹேரத் | செயலாளர் – மாகாணசபை, உள்ளூர் ஆட்சி அமைச்சு |
| திரு. டீ.எல்.தர்மப்பிரியா | சிரேஷ்ட உதவி செயலாளர் - போக்குவரத்து அமைச்சு |
| திரு. எஸ்.பி.டபிள்யு ஜயசிறீவர்தன | பணிப்பாளர் - இ.போ.ச. |
| திரு. கே.என்.இந்திரதிஸ்ஸ | சட்டத்தரணி |
| திரு. கோ்ணல் பி.ரத்நாயக்க | பணிப்பாளர் |

| | | |
|---|---|---|
| 12 ஆவது கூட்டம் - | (2009) – 2010 ஜனவரி 12 |
| 01 ஆவது கூட்டம் - | 2010 மார்ச் 16 |
| 02 ஆவது கூட்டம் - | (விசேஷ) 2010 ஏப்ரல் 01 |
| 03 ஆவது கூட்டம் - | 2010 ஜூலை 02 |
| 04 ஆவது கூட்டம் - | 2010 ஆகஸ்ட் 13 |
| 05 ஆவது கூட்டம் - | 2010 ஒக்ரோபர் 01 |
| 06 ஆவது கூட்டம் - | 2010 நவெம்பர் 30 |

**03 ஆவது கூட்டத்திலிருந்து சபையின் உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| திரு. எம்.டி.பந்துசேன | தலைவர் - இ.போ.ச. |
| திரு. எல்.ஏ.விமலரத்ன | உப தலைவர் - உறுப்பினர் (இ.போ.ச) |
| திரு.எம்.எம்.எஸ்.எஸ்.பீ.யாலேகம | சிரேஷ்ட உதவி செயலாளர் - போக்குவரத்து அமைச்சு |
| டாக்டர். நிஹால் ஜயதிலக | செயலாளர் - மாகாணசபை, உள்ளூர் ஆட்சி அமைச்சு |
| திரு. அஜித் அபேசேகர | திறைசேரி – பிரதிநிதி |
| திரு. சந்திரபானு அதிகாரம் | உறுப்பினர் |
| திரு. பிரசன்ன குமாரசிறி டி சில்வா | உறுப்பினர் |

**கேள்விச் சபை**

2010 ஆம் ஆண்டில் பெரிய அளவிலான கேள்விச் சபை ஊடான விலை கோரல்களின் பெறுமதி கீழே காட்டப்பட்டுள்ளது.

| பெரிய அளவிலான கூட்டங்களின் எண்ணிக்கை | திகதி | பெறுமதி | குறிப்புகள் |
|---|---|---|---|
| 01 | 2010.01.13 | நிதிப்பெறுமதி இல்லை | - |
| 02 | 2010.02.16 | நிதிப்பெறுமதி இல்லை | - |
| 03 | 2010.08.11 | 42,254,625.00 | - |
| 04 | 2010.08.11 | 49,119,900.00 | - |
| 05 | 2010.08.30 | நிதிப்பெறுமதி இல்லை | - |
| 06 | 2010.08.11 | நிதிப்பெறுமதி இல்லை | - |
| 07 | 2010.11.25 | நிதிப்பெறுமதி இல்லை | - |

2010 ஆம் ஆண்டில் சிறிய அளவிலான கேள்விச் சபை ஊடான விலை கோரல்களின் பெறுமதி கீழே காட்டப்பட்டுள்ளது.

| அளவிலான கூட்டங்களின் எண்ணிக்கை | திகதி | பெறுமதி | குறிப்புகள் |
|---|---|---|---|
| 01 | 2010.01.12 | 1,450,806.00 | - |
| 02 | 2010.02.26 | 3,755,354.00 | - |
| 03 | 2010.02.26 | 3,827,957.84 | - |
| 04 | 2010.03.18 | 4,707,552.48 | - |
| 05 | 2010.03.18 | 2,661,696.24 | - |
| 06 | 2010.03.18 | 3,061,020.00 | - |
| 07 | 2010.06.16 | 633,047.70 | - |
| 08 | 2010.06.16 | 320,000.00 | மாதாந்த வாடகை ரூபா 40,000 x 8 |
| 09 | 2010.06.16 | 4,808,860.00 | - |
| 10 | 2010.06.16 | 4,998,760.00 | - |

| | | | |
|---|---|---|---|
| 11 | 2010.09.10 | **பஸ் விற்பனை** | - |
| 12 | 2010.09.13 | 2,478,659.42 | - |
| 13 | 2010.09.13 | 4,973,800.00 | - |
| 14 | 2010.10.05 | 4,920,370.00 | - |
| 15 | 2010.05.09 | 4.580,777.82 | - |
| 16 | 2010.10.08 | 4,204,113.95 | - |
| 17 | 2010.10.12 | 1,711,963.00 | - |
| 18 | 2010.10.12 | 2,300,000.00 | - |
| 19 | 2010.10.12 | 173,978.51 | - |
| 20 | 2010.10.19 | 2,367,302.73 | - |
| 21 | 2010.10.18 | 4,680,775.00 | - |
| 22 | 2010.11.19 | 312,250.00 | - |
| 23 | 2010.12.10 | **பஸ் டிக்கட் மெசின் சம்பந்தமானது** | - |
| 24 | 2010.11.30 | 4,661,978.94 | - |
| 25 | 2010.12.13 | 3,205,039.10 | - |
| 26 | 2010.12.13 | 4,991,519.50 | - |
| 27 | 2010.12.07 | **வாகன உதரிப் பாகங்களின் விலை அனுமதித்தல்** | - |
| 28 | 2010.12.29 | 1,741,259.70 | - |
| 29 | 2010.12.29 | 1,800,000.00 | - |
| 30 | 2010.12.29 | 1,158,528.00 | - |
| 31 | 2010.12.29 | 3,772,117.80 | - |
| **மொத்தம்** | | **84, 259, 487.73** | |


**பாதுகாப்புப் பகுதி**

- இ.போ.சபையின் பிராந்திய அலுவலகங்கள், சாலைகள், உப சாலைகள், பிராந்திய வேலைக்களங்கள், சாரதிகள் பயிற்சி பாடசாலைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான முறைப்பாடுகள் மற்றும் நாடு முழுவதும் பிரயாணம் மேற்கொள்ளும் பயணிகளால் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளல்.
- தீ அணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை 250 ஆகும்.
- இ.போ.சபை சார்ந்த வழக்குகள் தொடர்பில் பிணைப்பணம் கொண்டு செல்லல் மற்றும் தலைமை அலுவலக நிதிகளை எடுத்து செல்லும் நடவடிக்கைகள் தொடர்பில் நாளாந்த வழித்துணை பாதுகாப்பு வழங்கள்
- இ.போ.சபையின் கீழ் வரும் நிறுவனங்களினது முக்கிய நபர்களுக்கும் மற்றும் முக்கிய இடங்களிற்கும் பாதுகாப்பு வழங்கல், வாகன தரித்தல்கள், சகல வழங்கல்கள், விநியோகங்களை கட்டுப்படுத்தல், மேற்பார்வை செய்தல் என்பனவும் இப்பிரிவின் பொறுப்பாகும்.

**வாணிப விநியோகப் பகுதி**

கட்டுப்பெத்தை மத்திய களஞ்சியம், நாரஹேன்பிட்டி பிரதான களஞ்சியம் ஆகியவற்றினால் விநியோகிக்கப்பட்ட மாற்றுருப்புகள், காகிதாதிகள், அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், ரயர்கள், பற்றறிகள் ஆகியவற்றின் பெறுமதி கீழே தரப்பட்டுள்ளது.

| **விடயம்** | **ரூபா** |
|---|---|
| மாற்றுருப்புகள், ரயர், பற்றறிகள், இயந்திரதொகுதிகள் உபகரணங்கள்ஆகியவற்றின் பெறுமதி | 584,432,658.28 |
| காகிதாதிகள், தளபாடங்கள், மற்றும் ஏனைய அலுவலக தேவைப்பாடுகளின் பெறுமதி | 55,636,835.47 |




**செயலாற்றுப் பகுதி**

1. இணையத்தளத்தினூடாக நாளாந்த செயலாற்றுகை தொடர்பான விபரங்களை பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. கணிசமான காலப்பகுதி ஒன்றினுள் நடைபெறும் சாலைகளின் பஸ் செயலாற்றுகை மட்டம் மற்றும் பெறப்பட்ட வருமானங்கள் உள்ளடங்களான நாளாந்த தகவல்களை தொலைநகல் செய்தி ஊடாக எந்நேரத்திலும் பெறக்கூடியதாக உள்ளதுடன் இம் முறைமையானது தகவல்களை சரியானதாகவும், துரிதமாகவும் பெற்றுக் கொள்வதற்கும், இ.போ.ச. தலைமை அலுவலக உயர் அதிகாரிகள் மேற்சொல்லப்பட்ட தகவல்களை தேவைப்படும்போதெல்லாம் இணையத்தளத்தினுர்டாக பெற்றுக் கொள்ளக் கூடிய வகையிலும் வழியமைக்கப்பட்டுள்ளது. இந்த இணையத்தள முறைமையானது தகவல் தொழில்நுட்ப முகாமையாளரின் தலையீட்டுடன் செயற்படுத்தப்பட்டுள்ளது.

2. செயற்பாட்டு அறையின் உருவாக்கம்

   பிரயாணிகளின் நாளாந்த பிரச்சனைகள் தொடர்பில் நேரடியாக கலந்துரையாடி அவர்களது பிரச்சனைகளை தீர்த்து வைக்கும் முகமாக முறைப்பாட்டாளர், சம்பந்தப்பட்ட சாலைகளின் உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் ஒரே சமயத்தில் கலந்துரையாடுவதன் மூலம் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் நோக்குடன் இ.போ.ச. தலைமை காரியாலயத்தில் செயற்பாட்டு அறை ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது.

3. புதிய பயணசீட்டு வழங்கும் இயந்திரம் அறிமுகப்படுத்தல்

   பாரிய போக்குவரத்து நெருக்கடி உள்ள பிரயாணப் பாதை மார்க்கங்களில் பயணசீட்டுகளை வழங்குவதில் உள்ள சிரமங்களை குறைக்கும் நோக்குடனும், பஸ் வண்டிகளின் நிலையங்களை அறிந்து கொள்ளக்கூடியதாகவும், அறிவுறுத்தல்களை அவர்களுக்கு வழங்கக்கூடியதாகவும், மோசடிகளின் விகிதாசாரத்தை குறைக்கும்

நோக்குடனும் மற்றும் தேவையான தகவல்களை சரியானதாகவும், துரிதமாகவும் பெறக்கூடிய வகையில் புதிய பயணசீட்டு வழங்கும் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது உடஹமுல்ல சாலையில் உள்ள சகல பஸ் வண்டிகளுக்கும் இப்புதிய பயண சீட்டு வழங்கும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் யட்டிநுவர, குருநாகல் தெற்கு சாலைகளிலும் இப் பயணசீட்டு வழங்கும் இயந்திர முறைமை செயற்படுத்தப்பட்டு வருகிறது.

4. திடீர் பரிசோதனை பிரிவு மறுசீரமைக்கப்பட்டுள்ளது

பட்டியல் வருமானத்தை அதிகரித்தல், சாரதிகள், நடத்துநர்களின் ஒழுக்காற்றை மேம்படுத்துதல் என்பவற்றை நோக்காக கொண்டு இப்பிரிவு மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவினை நிர்வகிக்கும் பொறுப்பு சபையின் பணிப்பாளர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. புலன்விசாரணைப் பணிப்பாளரின் கீழ் செயற்படும் இப்பிரிவின் உருவாக்கத்துடன் பெறப்படும் வருமானம் மற்றும் ஊழியர்களின் ஒழுக்காற்று என்பவற்றில் முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டுள்ளது.

5. தகவல் தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி இலவச பிரயாண அனுமதிப்பத்திரங்கள் வழங்கள்.

இ.போ.ச.ஊழியர்களுக்கு மேலதிகமாக முப்படையினருக்கும், பொலிஸாருக்கும், பாராளுமன்ற உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் இலவச பிரயாண அனுமதிப்பத்திரம் பெற உரித்து உடையவர்களுக்கும் இலவச பிரயாண அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை தகவல் தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


6. குத்தகை அடிப்படையில் பஸ் வண்டிகளைப் பெறல்

அரசாங்க நிதிப்படுத்தலின் மூலம் இ.போ.சபைக்கு தேவையான புதிய பஸ் வண்டிகளை பெறும் நடைமுறை இதுவரை காலமும் பின்பற்றப்பட்டு வந்த போதிலும் இந்நடைமுறையை மாற்றி இ.போ.சபையினால் பஸ்வண்டிகளின் செயலாற்றுகையின் மூலம் பெறப்படும் வருமானத்திலிருந்து குத்தகை பணத்தை செலுத்துவது எனும் அடிப்படையில் 100 பஸ் வண்டிகள் பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் 2010 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட போதிலும் சில தாமதங்கள் காரணமாக 2011 ஜனவரியிலேயே இந்த பஸ் வண்டிகள் பெறப்பட்டது.

7. செயற்பாட்டு நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள்


நாளொன்றுக்கு செயலாற்றிய கி.மீட்டர்களின் முன்னேற்றம்

| | |
|---|---|
| நாளொன்றுக்கு செயலாற்றப்பட்ட கி.மீ – 2007 | 835,313 |
| நாளொன்றுக்கு செயலாற்றப்பட்ட கி.மீ - 2008 | 857,033 |
| நாளொன்றுக்கு செயலாற்றப்பட்ட கி.மீ – 2009 | 920,168 |
| நாளொன்றுக்கு செயலாற்றப்பட்ட கி.மீ - 2010 | 935,940 |





நாளொன்றுக்கு வழிப்பட்டியல் வருமானத்தின் முன்னேற்றம்

நாளொன்றுக்கு வழிப்பட்டியல் வருமானம் 2007 ரூபா 29.300 மில்லியன்
2008 ரூபா 35.446 மில்லியன்
2009 ரூபா 36.829 மில்லியன்
2010 ரூபா 40.156 மில்லியன்




நாளொன்றுக்கு சராசரி பருவகாலச்சீட்டு வருமானத்தின் முன்னேற்றம்

| | | | |
|---|---|---|---|
| நாளொன்றுக்கு சராசரி பருவகாலச்சீட்டு விற்பனை - | 2007 | ரூபா | 984,430 |
| | -2008 | ரூபா | 1,443,219 |
| | -2009 | ரூபா | 1,469,222 |
| | -2010 | ரூபா | 1,485,046 |




**சமுக செயற்திட்டம்**


இ.போ.ச மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் உடன்பட்டுக்கொன்டு பாடசாலை சேவை கிராமிய சேவை ஏனைய சேவை ஆகிய வேலை திட்டதிதின் கீழ் 2010 ஆம் ஆண்டில் இ.போ.ச இனுடாக செயலாற்றப்பட்ட சேவைகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| **செயற்திட்டம்** | **சேவை எண்ணிக்கை** |
|---|---|
| சிசுசெரிய | 540 |
| கெமிசெரிய | 240 |
| நிசிசெரிய | 40 |

**சிசுசெரிய**

2010 ஆம் ஆண்டில் இ.போ.ச பாடசாலை சேவையின் பொருட்டு செயலாற்றப்பட்ட சேவையின் எண்ணிக்கை 540 ஆகும். இ.போ.ச பிராந்தியங்களின் பிரகாரம் அதன் செயற்பாடுகள் பின்வருமாறு மேற்கொள்ளபட்டது.

| பிராந்தியம் | சேவை எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 78 |
| கம்பஹா | 58 |
| களுத்துறை | 32 |
| கண்டி | 28 |
| நுவரெலியா | 4 |
| கிழக்கு | 30 |
| ரஜரட்ட | 58 |
| ருகுணு | 60 |
| சப்பரகமுவ | 97 |
| ஊவா | 58 |
| வயம்ப | 37 |
| மொத்தம் | 540 |



**கெமிசெரிய**


இ.போ.ச மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினது உடன்பாட்டுடன் கிராமப்பாதைகளில் கிராமப்புற சேவை வேலைத்திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டில் 240 சேவைகள் நடத்தப்பட்டது. எனினும் உரிய பஸ்வண்டிகளை செயற்படுத்துவதற்குரிய கிராம சேவை மூலதன ஒதுக்கீடு 2010 ஜனவரியிலிருந்து யூன் மாதம் வரைக்கும் மாத்திரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் செய்யப்பட்டது. இ.போ.ச பிராந்தியங்களின் பிரகாரம் கிராமிய பஸ் சேவை பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டது.

| **பிராந்தியம்** | **பஸ் சேவை எண்ணிக்கை** |
|---|---|
| கொழும்பு | 11 |
| கம்பஹா | 38 |
| களுத்துறை | 19 |
| கிழக்கு | 25 |
| றுகுனு | 33 |
| சப்பரகமுவ | 5 |
| ஊவா | 40 |
| வயம்ப | 69 |
| மொத்தம் | 240 |

**தொழில்நுட்பப் பகுதி**

மாகாண வேலைக்களங்களினுர்டாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் உற்பத்தி பெறுமதி

| **வகை** | **அலகுகள்** | **பெறுமதி** |
|---|---|---|
| எஞ்சின் | 322 | 53,191,044.00 |
| கியர் பெட்டி | 193 | 14,664,121.00 |
| அக்சல் | 09 | 473,582,.00 |
| பஸ் உடற்கோப்புகள் திருத்தம் | 108 | 20,577,809.00 |
| பம்ப் பழுது பார்த்தல் | 187 | 1,774,101.00 |
| இன்ஜெக்ரர் | 774 | 826,873.00 |
| ரயர் | 2,590 | 15,353,166.00 |
| | | ------------------- |
| | **மொத்தம்** | **106,860,696.00** |




**திடீர் பரிசோதனைக் குழு பிரிவு**

வழிப்பட்டியல் வருமானத்தில் குறைந்தது 25 % மோசடி செய்யப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆதலால் இந்நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு விசேட திடீர் பரிசோதனை குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டது. வருமான இழப்பு பின்வரும் புள்ளி விபரங்களில் காட்டப்பட்டுள்ளது.

| வருடம் | பாரதூரமான மோசடி | சிறிய மோசடி | பற்றுச்சீட்டின்றி பயணம் செய்த பிரயாணிகளிடமிருந்த அறவிட்ட தண்டப் பணம் ரூபா. |
|---|---|---|---|
| 2010 | 1,156 | 5,162 | 1,670,893.00 |

**பயிற்சிப் பிரிவு**

இப்பிரிவினால் 2010 ஆம் ஆண்டில் பின்வரும் ஊழியர் பிரிவினருக்கு பயிற்சி பட்டறைகள் நடத்தப் பட்டது.

இரவு நேர கடைமை அலுவலர்கள், பாதுகாப்பு பரிசோதகர்களுக்கான பயிற்சி.

தகுதிகாண் பட்டதாரிகளுக்கான பயிற்சி பட்டறை.

நிர்வாக உத்தியோகத்தர்கள்

திடீர் விபத்து பிரிவு உத்தியோகத்தர்கள்

கணக்கு பதியுனர்

தலைமை அலுவலக ஊழியர்கள்

பிராந்தியங்களின் விசாரணை அலுவலர்கள்

சாலைகளின் புலன் விசாரணை அலுவலர்கள்

போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் நேரக் கட்டுப்பாட்டு அலுவலர்கள்.

உற்பத்தித் திறன் பயிற்சி செயலமர்வுகள்

சகல பிராந்திய பொறியியலாளர்கள்.

உதவி நிதி முகாமையாளர்.

களஞ்சிய காப்பாளர்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.

சாரதிகள் நடத்துநர்கள்.

உதவி செயலாற்று முகாமையாளர்கள்.


முறைமாற்று வேலை (Roster) விடய எழுதுநர்.

சாலை முகாமையாளர்கள்

**மனித வளப் பகுதி**


2010 ஆம் ஆண்டு காலப்பகுதியின் பதவியணியினரின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| சாரதிகள் | 8,972 |
| நடத்துனர்கள் | 8,583 |
| மெக்கானிக் | 5,452 |
| ஏனைய ஊழியர்கள் | 11,765 |
| | ------------ |
| மொத்தம் | 34,772 |
| | ------------ |





ஏனைய ஊழியர்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| நிறைவேற்றுனர் – ஆண் | 1,048 |
| நிறைவேற்றுனர் – பெண் | 260 |
| எழுதுவினைஞரும் சமமானதும் | 11,457 |
| | ------------- |
| மொத்தம் | 11,765 |
| | -------------- |





**நிறைவேற்றுனர்களும் ஏனைய சகல ஊழியர்களும்**

| | |
|---|---|
| நிறைவேற்றுனர்கள் | 1,308 |
| ஏனைய சகல ஊழியர்கள் | 33,464 |
| | -------- |
| மொத்தம் | 34,772 |



| | |
|---|---|
| நிலையான ஊழியர்கள் | 32,284 |
| அமையம் ,ஒப்பந்தம், சேவை, நீடிப்பு, பயிலுனர் | 2,488 |
| மொத்தம் | ----------- |
| | 34,772 |
| | ---------- |




**தகவல் தொழில்நுட்பப் பிரிவு**

1. இலாப நட்ட அறிக்கை (P&L) தொடர்பாக தகவல் தரவுமுறைமையில் புதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. (நிதி பிரிவு)

2. தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கு இருப்பு கட்டுப்பாட்டு முறைமை (Inventory Control System) ஒன்று உருவாக்கம்.

3. மனிதவள தகவல் தரவுமுறைமையில் புதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. (மனிதவள முகா மைத்துவம்)

4. இ.போ.சபையின் சகல பிராந்தியங்களிலுமுள்ள உதவி முகாமையாளர்களுக்கும் இலாப நட்ட அறிக்கை (P&L) தொடர்பாக பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது. (இ.போ.ச)

5. செயற்பாட்டு பிரிவின் பொருட்டு பஸ்வண்டிகளின் செயலாற்றுகை (Run Out) தொடர்பாக செயற்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

6. பிரயாண பாதை வடிவமைப்பு (Route Plan) செயற்றிட்டம் செயற்படுத்தப்பட்டது. (இ.போ.ச)

7. இ.போ.ச. பஸ்வண்டிகளை புதுப்பித்தல் தொடர்பில் தகவல் தரவுமுறைமை தயாரிக்கப்பட்டது. (இ.போ.ச.)

8. பஸ்வண்டிகளின் செயலாற்றுகை (Run Out) பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது. (இ.போ.ச)

9. பிரயாண பாதை வடிவமைப்பு (Route Plan) பயிற்சித் திட்டம் நடாத்தப்பட்டது. (இ.போ.ச)

10. பிராந்திய இணைப்பதிகாரிகளுக்கு 06 மாத கணனிப் பயிற்சி அளிக்கப்பட்டது. (இ.போ.ச)

11. தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் தொடர்பில் நாடு முழுவதிலும் உள்ள சகல சாலைகளிலும் இருப்பு கட்டுப்பாட்டு முறைமை நடை முறைப்படுத்தப்பட்டது. (இ.போ.ச)

12. தலைவர் அலுவலகம் மற்றும் தலைவாpன் நிர்வாக உத்தியோகத்தர் பிரிவு இரண்டினையும் ஒன்றிணைத்து உள்ளக கணனி வலையமைப்பு ஒன்று செயற்படுத்தப்பட்டது. (தலைவர்)

13. உள்ளக கணக்காய்வு பிரிவினை கணனி வலையமைப்பு முறைமைக்குள் ஒன்றிணைத்து மடிக்கணனி (Laptop) பாவனையாளருக்காக Wifi வலயம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. (உள்ளக கணக்காய்வு பிரிவு)

14. விநியோகப் பிரிவு மற்றும் தலைமை அலுவலக களஞ்சிய முறைமை இரண்டினையும் ஒன்றிணைத்து உள்ளக வலையமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. (விநியோகப் பிரிவு)

15. தலைமை அலுவலகத்தில் 168 நிரந்தர புதிய தொலைபேசிகள் ஒன்றிணைக்கப்பட்டு தொலைபேசி பாpவர்த்தனை ( PxBx ) தகவல் முறைமை ஒன்று தாபிக்கப்பட்டு தொழில்நுட்ப வேலைகளும் மேற்கொள்ளப்பட்டது. (தலைமை அலுவலகம்)

16. அழைப்பு கண்காணிப்பு ( Call Monitoring) மென்பொருளை பயன்படுத்தி சகல நிலையான தொலைபேசிகளினதும் தொலைபேசி கட்டண விபர அறிக்கைகளைப் பெறும் வகையில் செயற்றிட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

17. டயலொக் ரெலிகொம் நிறுவனத்தினுர்டாக தாபிக்கப்படும் பெரும் பரப்பு வலையமைப்புக்குள் (Wide Area Network) இ.போ.சபைக்கான பிரதான வழிப்படுத்தி (Router) ஒன்றினை நிறுவுவதற்கான சகல தொழில்நுட்ப செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

18. பிராந்திய அலுவலகம் (II) மற்றும் நுவரெலியா பிராந்திய அலுவலகம் என்பவற்றை VPN உடன் ஒன்றிணைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ.போ.ச)

19. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, தென் பிராந்தியம் என்பவற்றுக்குரிய சகல சாலைகள் மற்றும் யாழ்ப்பாண பிராந்தியத்துக்குரிய பெருமளவான சாலைகள் VPN உடன் ஒன்றிணைக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. ( Voice Data) (இ.போ.ச)

20 பிரிவுத் தலைவர்கள் மற்றும் அவசிய நபர்களுக்கு இ.போ.சபையின் மின்னஞ்சல் முகவரி வழங்கப்பட்டது. (இ.போ.ச)

21. தலைமை அலுவலகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்துக்கும் மற்றும் பிராந்திய முகாமையாளருக்கும் Video Phone வழங்கப்பட்டதுடன் அத் தொலைபேசிகள் பரிசீலிக்கப்பட்டு தொழில்நுட்ப செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது.

22. இ.போ.ச. தொலைபேசி நிலையத்திற்கு இணையத்தள வசதிகள் மற்றும் IP Phone வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. ( தலைமை அலுவலகம்)

23. தலைமை அலுவலகத்தின் தொலைபேசி நிலையத்திலிருந்து மத்திய பஸ் நிலையத்தை அவதானிக்க கூடிய முறையில் கண்காணிப்பு தொலைக்காட்சி கமெரா (CCTV) முறைமை தாபிக்கப்பட்டுள்ளது.

24. நிதிப் பிரிவின் இரண்டாவது கணனி அறைக்கு இணையத்தள வசதி அளிக்கப்பட்டுள்ளது. (நிதிப் பிரிவு)

25. உற்பத்தி திறன் இல்லத்திற்கு கணனி வலையமைப்பு ஏற்படுத்தப்பட்டது. (தலைமை அலுவலகம்

**ஊடகப் பிரிவு**

- “சிறீ லங்கம புவத” செய்தித் தாளின் 4 வது தொகுதி ஜனவரியிலும், 5 வது தொகுதி ஜூனிலும் அச்சிடப்பட்டது.
- இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தினால் ஒலிபரப்பப்படும் “சந்தமாமா லங்கம சாரிக்கா'' எனும் சந்தமாமா நிகழ்ச்சித் திட்டம் 2010 ஜனவரி வரையும் அலுவலக ஊழியர்களின் பிள்ளைகளின் பங்களிப்புடன் நடத்தப்பட்டது.

- இ.போ.ச. ஊழியர்களுக்கு உயர்ரக சினிமா பட ரசனையை ஏற்படுத்தும் நோக்குடன் இரண்டாவது தடைவையாக இ.போ.ச.தலைமை அலுவலகத்தில் 2010 பெப்ரவரி 18 ஆம் திகதி மதிய போசன இடைவேளையில் " மஜிட் மஜிட்" எனும் ஈரானிய நாட்டு படத் தயாரிப்பாளரினால் தயாரிக்கப்பட்ட " தந்தை " (Father) எனும் சினிமாப்படம் காண்பிக்கப்பட்டது
- இ.போ.ச. நூலக அபிவிருத்தி திட்டத்திற்கு பங்களிப்பு செய்யப்பட்டது.
- இ.போ.சபை விஷேட வைபவங்களிற்கான ஊடக அனுசரணை வழங்குதல், விஷேட செய்திகளை வெகுஜன ஊடகங்களிற்கு வழங்குதல் மற்றும் அச்செய்திகளை பிரசித்தப்படுத்துவதற்கு பங்களிப்பு செய்தல்.
- நாளாந்த செய்திப் பத்திரிகைகளில் காணப்படும் இ.போ.ச. தொடர்பான செய்திகள் சேகரிக்கப்பட்டு பாதுகாத்தல். அதேவேளை இ.போ.சபையுடன் சம்பந்தப்பட்ட முக்கிய செய்தி விபரங்கள் பத்திரிகையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பிரிவுகளின் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

# கணக்கீட்டுக் கொள்கைகள்

1.நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமையவும் வரலாற்றுச் செலவு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு மரபுக்கமையவும் தயாரிக்கப்பட்டு இ.போ.சபையின் சுற்றயல் அலகுகளின் நிதிப்பேறுகளுடன் இணைக்கப்பட்டதன் பின்னர் ஒன்று சேர்த்து சமர்ப்பிக்கப்படுகின்றது.

2. ஐந்தொகையும் சபைக்கணக்குகளும் ஆயத்தம் செய்யப்படுவதற்கு பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு அடிப்படைக் கொள்கைகள் பின்பற்றதுடன் திரட்டப்பட்ட வருவாய், செலவு ஆகியவற்றுக்கு கணக்கீட்டுக் கொள்கைகள் உறுதியாகப் பிரயோகிக்கப்பட்டு அவை தொடர்பான காலத்திற்கு நிதிக்கூற்றுகளில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன.

3. நிலையான சொத்துகள் தேய்மானம் நீங்கலாக கொள்விலையில் ஐந்தொகையில் காட்டப் பட்டுள்ளன. மூலதன நடைபெறும் வேலை நிலையான சொத்துகளாகக் காட்டப்படவில்லை. 23,190,343/= ரூபா பெறுமதியான காணிகளில் சபை குடியிருக்கிறது. ஆயினும் இவற்றின் உறுதிகள் இன்னமும் சபைக்கு கிடைக்கவில்லை இக்காணிகளின் முழுப் பெறுமதி நிலை யான சொத்துகளின் கீழ் காட்டப்படவில்லை. இக்காணிகளுக்கான கொடுப்பனவு 8,299,517/= ரூபா பெறிமதியானது நிலையான சொத்துகளின் கீழ் முற்பணமாக காட்டப்பட்டுள்ளது.

4. கொள்வனவு செய்யப்படும் வருடத்திற்கு தேய்மான ஏற்பாடு செய்யப்படாததுடன் விற்பனை செய்யப்படும் வருடத்திற்கு முழுமையான தேய்மான ஏற்பாடு செய்யப்படுகிறது. தேய்மான ஏற்பாடு நேர்கோட்டு முறையில் பின்வரும் வீதங்களில் செய்யப்படுகின்றது.

| | |
|---|---|
| கட்டிடம் | 2.5% |
| பஸ், ஏனைய வாகனங்கள் | 12.5% |
| பொறி உபகரணங்கள் | 10% |
| தளபாடங்கள் | 10% |
| கணனிகள் | 25% |
| பஸ் எஞ்சின் | 20% |

5. இளைப்பாறும்போது ஊழியர்களின்ன் ஒவ்வோராண்டு சேவைக்கும் ஒரு மாதச் சம்பளத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது புத்திசாதுரியமானதும் நீதி நியாயமானதுமாகும்.

6. பெறவேண்டிய வருமானம், பொலிஸ் வாரண்ட், ஏனையவற்றுக்கு 5% அடிப்படையில் அறவிடமுடியாக் கடன்களுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

7. முதல் உள்ளே முதல் வெளியே முறையில் கையிருப்பு பெறுமதியிடல் செய்ய்யப்படுகின்றது.

8. இலங்கை கணக்கீட்டு நியமனம் 24 இற்கு ஏற்ப பஸ்களுக்கான அரச மானியங்கள் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதனுடைய ஆயுட்காலமான 08 வருடங்களுக்கு பதிவளிக்கப்படுகின்றது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

**AUDITOR GENERAL'S DEPARTMENT**


මගේ අංකය / எனது இல / My No. } ஆர்ரீ/பீ/எஸ்எல்ரீபீ/எப்ஏ/2010

ඔබේ අංකය / உமது இல / Your No. }

දිනය / திகதி / Date } 2014 மே 28

18 AUG 2014

தலைவர்
இலங்கை போக்குவரத்துச் சபை

**இலங்கை போக்குவரத்துச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை போக்குவரத்துச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை உரிய காலப்பகுதிக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை 2013 ஒக்தோபர் 04 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயமாக சமர்ப்பிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன்


අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව

இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை

No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. } 2887028 /034

ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223

විද්‍යුත් තැපෑල / ஈ-மெயில் / E-mail. } oaggov@sltnet.lk

நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

எனது பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

**1.4 பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிறுவனம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

சபை தொடர்ச்சியாக நட்டம் அடைவதன் அடிப்படையில் தேறிய சொத்துக்கள் அதிகளவில் வீழ்ச்சிக்கு உள்ளாகியுள்ளதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் அவை ரூபா 12,278.11 மில்லியன் மறைப் பெறுமதியினைக் கொண்டிருந்ததுடன் அதன் காரணமாக திறைசேரியின் அல்லது அரசாங்கத்தின் ஏனைய நிதி நிவாரணங்கள் இல்லாமல் நிறுவனத்தை நடாத்துவதில் நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

(அ) நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் திறைசேரி மானியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 204.73 மில்லியன் பெறுமதியான என்ஜின் தொகுதிக்காக ரூபா 40.95 மில்லியன் மற்றும் ரூபா 3.99 மில்லியன் பெறுமதியான பேரூந்துகளிற்காக ரூபா 0.5 மில்லியன் என்ற வகையில் ரூபா 41.45 மில்லியன் கூட்டுத் தொகை இலங்கை கணக்கீட்டு நியம இல. 24 இன் படி பிற்போட்ட மிகைவிதிப்பு வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நட்டம் இதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 204.73 மில்லியன் பெறுமதியான 152 பேரூந்து என்ஜின் தொகுதிகள் நிதிக்கூற்றுக்களில் தனியாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 20 சதவீதப் படி பெறுமானத் தேய்விடப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் முன்னைய

ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட என்ஜின்களின் பெறுமதிகள் பேருந்துகளின் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 12.5 சதவீதப் படி பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தது. இது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சபையின் காணி மற்றும் கட்டிடங்களின் கிரயம் வெவ்வேறாக இனங்காணப்படாது மொத்தக் கிரயத்தில் 50 சதவீதமான ரூபா 160.94 மில்லியன் கட்டிடங்களின் கிரயமாகக் கருதப்பட்டு அதில் 2.5 சதவீதம் நேர்கோட்டு முறையை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத் தேய்விற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், பணிக்கொடைக்கான ஏற்பாட்டினைக் கணிப்பீடு செய்வதற்காக திசெம்பர் மாதத்தின் சம்பளத்துக்குப் பதிலாக சராசரிச் சம்பளத்தை அடிப்படையாகக் கொள்ளப்பட்டதன் காரணமாக ரூபா 3,191.78 மில்லியன் தொகையான பணிக்கொடைக்கான ஏற்பாட்டுக் கணக்கின் மீதியின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) 06 பஸ் கம்பனிகளுக்குரிய முறையே ரூபா 217.68 மில்லியன் மற்றும் ரூபா 369.03 மில்லியன் தொகையான புத்தகப் பெறுமதிகள் கொண்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் மீள்மதிப்புச் செய்யப்படாது 2007 ஆம் ஆண்டின் போது சபைக்கு கையேற்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அவற்றின் மீள் மதிப்புப் பெறுமதிகள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டில் கட்டளையிடப்பட்ட ரூபா 341.75 மில்லியன் பெறுமதியான 265 பேருந்து என்ஜின் தொகுதிகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் சபைக்கு கிடைத்திருந்த போதிலும், அதில் ரூபா 204.73 மில்லியன் பெறுமதி மாத்திரமே கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ரூபா 137.02 மில்லியனால் சொத்துக்களும் அரசாங்க மானியமும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் மூன்று பேருந்துகள் விற்கப்பட்டமை இரண்டு தடவைகள் பதியப்பட்டிருந்தமையாலும் முன்னைய ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட மூன்று பேருந்துகள் மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்டதாக பதிவு செய்யப்பட்டிருந்தமையாலும் ரூபா 1.01 மில்லியன் கூட்டுத் தொகையால் பேருந்து விற்பனை இலாபம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமை காரணமாக ஒட்டுமொத்த நட்டம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. அத்துடன் பயன்படுத்த முடியாத பேருந்துக் கணக்கின் மீதி ரூபா 2.39 மில்லியனாலும் பயன்படுத்த முடியாத பேருந்தின் பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு ரூபா 2.38 மில்லியனாலும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஊஊ) மீளாய்வாண்டின் போது ரூபா 315,000 கிரயமும் ரூபா 314,000 திரண்ட பெறுமானத்தேய்வு ஏற்பாடும் கொண்ட பாவனையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட பேருந்தினை விற்பனை செய்கையில் கிரயம் ரூபா 3,150,000 எனவும் திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 3,149,000 எனவும் பதியப்பட்டிருந்தமையால் பாவனையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட பேருந்துக் கணக்கின் மீதி மற்றும் பாவனையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட பேருந்து பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு மீதி என்பன ரூபா 2,835,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) போக்குவரத்து அமைச்சின் செலவினத் தலைப்பு தொடர்பில் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த கனனி அச்சு அறிக்கையின் படி மூலதனச் செலவுகளுக்காக ரூபா 849.28 மில்லியன் சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் அரசாங்க மானியத்தின் கீழ் ரூபா 3.99 மில்லியன் மாத்திரம் கணக்கிடு செய்யப்பட்டிருந்தது. அரசாங்க மானியத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 341.75 மில்லின் தொகையான 265 என்ஜின் தொகுதிகளின் பெறுமதி கணக்கிடு செய்யப்படாமை வேறுபாட்டிற்கு தாக்கமளித்திருந்ததுடன் எஞ்சிய ரூபா 503.54 மில்லியன் வேறுபாட்டிற்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினால் சான்றுறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம், திறைசேரியின் பங்கு மூலதனம் ரூபா 3,944.89 மில்லியன் ஆக இருந்தபோதிலும் அது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 319.77 மில்லியன் கிரயமும் ரூபா 319.03 மில்லியன் திரண்ட பெறுமானத்தேய்வும் கொண்ட 742 பேருந்துகள் ரூபா 115.55 மில்லியன் தொகைக்கு விற்கப்பட்டதாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. கொள்வனவுப் பிரிவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் படி விற்பனைப் பெறுமதி ரூபா 125.59 மில்லியன் ஆகும். இந்த வேறுபாட்டிற்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இருப்பு மீதி ரூபா 1,967.88 மில்லியன் ஆன போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் படி இருப்பு மீதி ரூபா 715.74 மில்லியனாக காணப்பட்டது. அதன் படி ரூபா 1,252.14 மில்லியன் வேறுபாட்டிற்கு காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 தொங்கல் கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மீதிகள் மாற்றமடைந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த 05 தொங்கல் கணக்குகளில் காணப்பட்ட செலவு மீதிகள், ரூபா 400.68 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அம்மீதிகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,594.7 மில்லியன் தொகையான ஏனைய பெறவேண்டிய கணக்குகளின் மீதிகளுக்கு மத்தியில் தலைமை அலுவலகத்திற்குரிய ரூபா 951.77 மில்லியன் பெறுமதியான 15 மீதிகளுக்காக மாத்திரம் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையான 26 தனித்தனி மீதிகளின் பெறுமதி ரூபா 210.31

மில்லியனாக இருந்தது. இத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலைமை அலுவலகத்திற்குரிய ரூபா 2,277.0 மில்லியன் தொகையான கடன்கொடுத்தோர்களில் உள்ளடக்கப்பட்ட 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு இடைப்பட்ட ரூபா 1,347.81 மில்லியன் தொகையான 18 மீதிகள் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 25 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான நீண்டகால கடன் கணக்குகளின் 05 மீதிகளின் ரூபா 1,976.6 மில்லியன் கூட்டுத் தொகை 2010 திசெம்பர் 31 வரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2005 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 5.69 மில்லியன் தொகையான மூன்று வழங்கப்பட்ட முற்பணக் கணக்கு மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த முற்பணங்கள், பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 105,000 முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2007 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டிருந்த தலைமை அலுவலகத்தின் விசேட முற்பணக் கணக்கின் ரூபா 331,650 செலவு மீதி மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்து இலங்கை கடன் கணக்குகளின் மீதி ரூபா 38.01 மில்லியனாக இருந்ததுடன் அதற்காக அத்திகதியில் செலுத்த வேண்டிய கடன் வட்டி ரூபா 1,176.07 மில்லியனாக இருந்தது. இக்கணக்கு மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2005 ஒக்டோபர் 18 ஆந் திகதி இலங்கை போக்குவரத்துச் சபையைத் தோற்றுவிக்கும் போது கையேற்கப்பட்ட ரூபா 1,174.22 மில்லியன்

கூட்டுமொத்தமான நீண்ட காலப் பொறுப்புக்களின் 16 மீதிகள் மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பின்னர் பணம் அறவிடும் அடிப்படையில் 12 வெளிநிறுவனங்களுக்கு பண உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் வருமானங்கள், அட்டுறு அடிப்படைக்குப் பதிலாக காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் கிடைக்க வேண்டிய வருமானத்தை வேறாக இனங்காணக்கூடிய வகையில் கடன்பட்டோர் பேரேடு பேணப்படாதிருந்ததனால் மீளாய்வாண்டின் இறுதியில் அந்நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய வருமானத்தை சரியாக இனங்காண முடியாதிருந்தது. இருப்பினும் தொடர்ந்துவரும் ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 111.33 மில்லியன் தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய வருமானமாக கணக்குகளில் செம்மையாக்கப்பட்டிருந்தது.

### 2.2.7 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் சம்பந்தமாக அவற்றிற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால், சான்றுறுதிப் படுத்துவதற்கோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியவில்லை.

| | விடயம் | பெறுமதி | | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | | |
| (அ) | நடைமுறையல்லாத சொத்துக்கள் | 1,842.85 | (i) | ரூபா 239.79 மில்லியன் பெறுமதிகொண்ட காணி கட்டிடங்கள், மோட்டார் வாகனங்கள், பயன்படுத்தப்படாத வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களிற்கான விபரமான பட்டோலைகள் |
| | | | (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| | | | (iii) | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மெய்மையாய்வு அறிக்கை |
| (ஆ) | முதலீடுகள் | 525.13 | (i) | ரூபா 249.39 மில்லியன் பெறுமதி கொண்ட குறுங்கால முதலீடுகள், |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நிலையான வைப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புக்களுக்கான சான்றிதழ்கள் |
| | | | (ii) | ரூபா 516.41 மில்லியன் 06 முதலீட்டுக் கணக்குகளுக்குரிய விபரமான பதிவேடு |
| (இ) | நானாவித கடன்பட்டோர் | 987.23 | (i) | தனித்தனி மீதிகளை உள்ளடக்கிய பதிவேடு |
| | | | (ii) | ரூபா 293.65 மில்லியனுக்கான காலப்பகுப்பாய்வு |
| (ஈ) | கடன்கொடுத்தோர் | 2,596.56 | (i) | தனித்தனி மீதிகளை உள்ளடக்கிய பதிவேடு |
| | | | (ii) | ரூபா 2,101.41 மில்லியனுக்கான காலப்பகுப்பாய்வு |
| (உ) | வங்கி மீதிகள்<br>வங்கி மேலதிகப்பற்று | 318.55<br>854.68 | } | ஒவ்வொரு வங்கி கணக்குகளின் மீதிகளை வெவ்வேறாகக் காட்டும் பதிவேடு |

**2.2.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் (8)(1) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் 5:2:4 ஆம் பந்தி | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் அடுத்துவரும் ஆண்டுகளுக்கான பாதீடு தயாரிக்கப்பட்டு அது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பாதீடு பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் சபையின் ஊழியர் சேமலாப நிதிய நியதிச் சட்டங்களும் பிரமாணங்களும் | ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்ற சேமலாப நிதிய பங்களிப்பும் சபையின் பங்களிப்பும் ஊழியர் உழைத்த மாதத்திற்கு அடுத்த மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் உரிய ஊழியர் சேமலாப நிதியத்தின் கணக்குகளுக்கு செலவுவைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான பங்களிப்பு பணமும் முன்னைய ஆண்டிற்கான பங்களிப்பு பணமும் உள்ளடக்கப்பட்ட ரூபா 621.36 மில்லியன் சபையினால் பேணப்பட்டுவருகின்ற சேமலாப நிதியத்திற்கும் ரூபா 642.13 மில்லியன் இலங்கை மத்திய வங்கியின் சேமலாப நிதிய கணக்கிற்கும் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 4.3 சதவீதத்தினாலும் 31 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 2.25 மில்லியன் மிகை அறவீடு செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | ஊழியர்களின் சம்பளத்தில் 03 சதவீதத்திற்குச் சமமான பங்களிப்பு பணம் ஊழியர் உழைத்த மாதத்திற்கு அடுத்த மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிறுவனத்தினால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான பங்களிப்பு பணத்தையும் முன்னைய ஆண்டுகளுக்கான பங்களிப்பு பணத்தையும் உள்ளடக்கி ரூபா 44.9 மில்லியன் அவ்வாறு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 16.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 543,450 தொகையான மிகை அறவீடு செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஏ) | 2010 யூலை 12 ஆந் திகதிய ஸ்ரீ லங்கம/பிரகா/நிசா(கா)2010/18 ஆம் இலக்க பிரதிப் பொது முகாமையாளரின் (கைத்தொழில்) கடிதம் | 12 பிராந்தியங்களிற்குச் சொந்தமான 1,220 பேருந்துகளை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கும், வெஸ்கோ கம்பனிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 143 பேருந்துகளை பேருந்துக் குழாத்திலிருந்து அகற்றுவதற்கும் அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.2.9 தீர்த்துவைக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பிராந்திய போக்குவரத்துச் சபையின் கீழ் காணப்பட்ட ரூபா 1.23 மில்லியன் தொகையான வழியிலுள்ள எரிபொருள் இருப்புக் கணக்கின் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1999 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்ட நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைக் கணக்குகளின் ரூபா 35.75 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்த்துவைக்கப் பட்டிருக்கவில்லை.

(இ) மொத்தப் பெறுமதி ரூபா 1,221.31 மில்லியன் ஆன அசைவற்ற சொத்துக்களும் பொறுப்புக்களும் தொடர்பாக முழுமையான பரிசோதனை செய்யப்பட்டு பணிப்பாளர் சபையின் தெரிந்துகொள்ளல் மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு பொது முயற்சிகள் திணைக்களம் 2002 யூலை 30 ஆந் திகதி அங்கீகரித்திருந்த போதிலும் அச்சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்கும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு இலங்கை போக்குவரத்துச் சபை ரூபா 7,736.84 மில்லியன் நட்டத்தை அடைந்திருந்ததுடன் திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 5,616.46 மில்லியன் தொகையான மானியத்தின் காரணமாக அந்த நட்டம் ரூபா 2,120.39 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது. இதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டில் ரூபா 7,976.08 மில்லியன் நட்டம் அடைந்திருந்ததுடன் திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 6,364.38 மில்லியன் தொகையான மானியத்தின் காரணமாக அந்நட்டம் ரூபா 1,611.7 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டின் போது நிதிசார் விளைவுகள் ரூபா 508.69 மில்லியன் வீழ்ச்சியினைச் சுட்டிக்காட்டியிருந்ததுடன் அரசாங்க மானியங்களில் 13.3 சதவீதக் குறைவு மற்றும் செயற்பாட்டுச் செலவில் ரூபா 5.4 சதவீத அதிகரிப்பு என்பன இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 1958 ஆம் ஆண்டில் பஸ் கம்பனிகளை மக்கள் மயப்படுத்தும் போது பறிமுதல் செய்யப்பட்ட காணிகளுக்காக ரூபா 8.29 மில்லியன் தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. அச்சந்தர்ப்பங்களில் காணிகளின் முழுப் பெறுமதியையும் காணிகளின் உரிமையாளருக்குச் செலுத்தாததன் காரணமாக அவற்றின் உரிமை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு கையேற்பதற்கு முடியாதிருந்தது. இக்காணிகளின் அமைவிடமும் உரித்தும் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து செலுத்தப்பட்ட முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கும் அக்காணிகளை சபையின் பெயரில் பதிவுசெய்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

சபையால் மேலதிகப்பற்று வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 42.43 மில்லியன் தொகை வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 57.64 சதவீத அதிகரிப்பாகும். மேலும், நிதிச் செலவுகளில் வங்கிக் கட்டணங்கள், வங்கி வரவு வரிகள் மற்றும் ஏனைய செலவினங்கள் என ரூபா 51.39 மில்லியன் கூட்டுத்தொகை உள்ளடங்கியிருந்ததுடன்

காசோலைகள் செல்லுபடியற்றதாதல், காசோலைகள் மதிப்பிழத்தல் மற்றும் கணக்கில் காசு இல்லாமை போன்றன இதற்கான காரணங்களாகும்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஎப/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அடுத்துவரும் ஆண்டின் பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 01 ஆண்டு 11 மாதங்கள் தாமதித்து 2013 பெப்ரவரி 12 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட தரவுகளுக்கும் உள்ளபடியான தரவுகளுக்குமிடையே 07 சதவீதம் முதல் 19 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக சபைத் தலைவருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும்
(உ) கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துதல்/ தீர்த்துவைத்தல்
(ஊ) சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கையேற்றல்
(எ) பாதீட்டுக் கட்டுப்பாடு

எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி